**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.</u>**

**<u>O.S.எண். 1253/2022</u>**

**வா.சா.3. கவுண்டப்பன்** 02.11.2023.

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

எனக்கு சொந்த ஊர் பொருளூர். வாதி எனது பெரியப்பா மகன். நான் தாக்கல்செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்ட விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி குடும்ப செலவு மற்றும் பண்ணைய செலவிற்காக கடன் கேட்டார். கடன் 29.06.2019ம் தேதி கொடுக்கப்பட்டது பிராமிசரி நோட்டு 30.06.2019ம் தேதி எழுதப்பட்டது. கடன் வாங்கியதை நான் நேரில் பார்த்தேன். நான் வருவதற்கு முன்பு பணத்தை வாங்கிவிட்டார் என்று நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருப்பதை நான் சொல்லவில்லை அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு. வாதி எனது பெரியப்பா மகன் என்பதால் அவர் அழைத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தவறு. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும், தாவா பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், வாதி உற்பத்தி செய்த பிராமிசரி நோட்டில் அவர் என் பெரியப்பா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சி கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. குடும்ப செலவிற்கும், பண்ணைய செலவிற்கும் கடன் பெற்றார் எனும் சொல்லும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன். அதை தவிர வேறு என்ன காரணத்திற்காக அவர் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு காரணங்களை தவிர வேறு காரணங்களுக்கு பிரதிவாதி கடன் பெற்றதாக நான் பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். பணப்பரிவர்த்தனை நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் எங்கு நடைபெற்றது என்றால் ராஜன் வீட்டில் வைத்து நடைபெற்றது. அவ்வாறு பணப்பரிமாற்றம் கடையில் வைத்து நடைபெற்றதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல கடையும் வீடும் ஒன்றுதான். ராஜன் கடைக்குள் குடியிருக்கிறார் என்றால் பின்னால் வீடு முன்னால் கடை இருக்கிறது. ராஜன் மாடியில் குடியிருப்பதாக நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல அவர் மாடியிலும் குடியிருக்கிறார் பின்பகுதியிலும் குடியிருக்கிறார். ராஜன் கடை பேருந்து நிலையத்தை ஒட்டி உள்ளதா என்றால் சரிதான். அந்த கடை பேக்கரி. நான் சொன்ன இடத்திலும், சொன்ன தேதியிலும் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும், எந்த கடன் உறுதிச்சீட்டும் எழுதிக்கொடுத்து கையெழுத்து மற்றும் கைரேகை செய்யவில்லை என்றால் சரியல்ல.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.11.02 17:19:59 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்